# பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

## இந்திய அரசினால் நிதியிடப்படும் பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டம்

வரிசைக் குடியிருப்புகள் மற்றும் தற்காலிக கொட்டகைகளில் வசிக்கும் பெருந்தோட்டச் சமூகத்தினருக்கு 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசாங்கம் மானியத்தை வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் மூன்று வருட காலப்பகுதியில் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, உட்கட்டமைப்பு பிரிவின் கீழ் ஏழு பெருந்தோட்ட பிராந்தியங்களில் (பதுளை, நுவரெலியா, ஹட்டன், கண்டி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் காலி) அமுல்படுத்தப்படுகின்றது. ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் செயறிட்டப் பொறியியலாளர் மற்றும் சிரேஷ்ட தொழில்நுட்ப அதிகாரிகளை ஆட்சேர்ப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

### 1. செயற்றிட்டப் பொறியியலாளர் - 01 பதவி (நிலை PS 4)
### Project Engineer

பின்வரும் 1 அல்லது 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இயைபுடைய துறையில் ஒரு இளமாணிப் பட்டம் அல்லது இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் இயைபுடைய துறையில் தகைமைக்குப் பின்னரான குறைந்தபட்சம் 07 வருடகால அனுபவம்.
2. இலங்கை பொறியியல் சேவையில் III/II அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்பில் ஒரு அதிகாரி அல்லது III/II வகுப்பில் குறைந்தபட்சம் 07 வருடகால அனுபவத்துடன் இயைபுடைய துறையில் இதற்கு நிகரான நிலை.

இரண்டு பதவிகளுக்கும் பெருந்தோட்ட துறை அபிவிருத்தி வேலைகள் மற்றும் வெளிநாட்டினால் நிதியிடப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கடமை நிலையம் : பெருந்தோட்ட பிராந்திய அலுவலகங்கள் / அமைச்சு அலுவலகம்.

### 2. சிரேஷ்ட தொழில்நுட்ப அதிகாரிகள் - 02 பதவிகள் (நிலை PS 5)
### Senior Technical Officers

பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இயைபுடைய துறையில் ஒரு இளமாணிப் பட்டம் அல்லது இயைபுடைய தொழில்நுட்பத் துறைப் பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம்/ தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் 7ஆம் நிலைக்குக் குறையாத தேசிய தொழிற்திறன் தகைமை தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் தேவைப்படும் விசேடத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 04 வருட கால அனுபவம்.
2. இயைபுடைய தொழில்நுட்பத் துறைப் பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் 6ஆம் நிலைக்குக் குறையாத தேசிய தொழிற்திறன் தகைமை தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் தேவைப்படும் விசேடத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 09 வருட கால அனுபவம்.
3. இயைபுடைய தொழில்நுட்பத் துறைப் பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் 5ஆம் நிலைக்குக் குறையாத தேசிய தொழிற்திறன் தகைமை தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் தேவைப்படும் விசேடத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 14 வருட கால அனுபவம்.

கடமை நிலையம்: பெருந்தோட்ட பிராந்திய அலுவலகங்கள்/ அமைச்சு அலுவலகம்.

**பொது நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர் 65 வருடங்களுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.
2. தெரிவு செய்யப்படும் பணியாளருக்கு 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.
3. அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும்.
4. ஊழியர் மாதாந்த சம்பளத்தில் 8% தொகையை அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்பு செய்தல் வேண்டும் என்பதுடன் வேலை வழங்குநரினால் 12% பங்களிப்பு செய்யப்படும்.
5. சேவை நிபந்தனை - இந்தப் பதவி ஆரம்பத்தில் ஒரு வருட காலம் ஒப்பந்த அடிப்படையிலாகும். அமைச்சின் தேவைப்பாடு மற்றும் திருப்திகரமான செயற்றிறனின் அடிப்படையில் இது நீடிக்கப்படலாம்.
6. அரசாங்க ஊழியர்கள் தங்கள் விண்ணப்பங்களை தமது திணைக்களத்தின் தலைமையின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஆர்வமுள்ள தனிநபர்கள் சுய தரவுகளுடன் தமது கல்வி மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் செயலாளர், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு, சமூக உட்கட்டமைப்பு பிரிவு, இல. 45, சென் மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03 எனும் முகவரிக்கு 2025-05-31ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.

**B.K. பிரபாத் சந்திரகீர்த்தி,**
**செயலாளர்,**
**பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு**

**தொலைபேசி இல. 011-2541369**
**தொலைநகல் இல. 011-2328117**
**மின்னஞ்சல்: secretary@mws.gov.lk**